தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

04.10.2012 P.M

05.10.2012 P.M

## வேளாண் பல்கலை. சார்பில் சூப், சாலட் தயாரிப்புப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் சூப், சாலட் தயாரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வரும் செவ்வாய்க்கிழமை (அக்டோபர் 9) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் தக்காளி சூப், கிளியர் வெஜ் சூப், கிரீமி மஷ்ரூம் சூப், ஸ்வீட் கார்ன் சூப், ஃபிரஞ்ச் ஆனியன் சூப், கிரீன் சாலட், வெள்ளரி பச்சடி, தக்காளி குடமிளகாய் சாலட், முளை கட்டிய பயிறு சாலட் ஆகியவை செய்ய பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், 30-யு, 10-வது தெரு, அண்ணா நகர் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்துக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 2626 3484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## விவசாய விமோசனம்

By ஆர்.எஸ். நாராயணன், ஒரு காலகட்டத்தில் விவசாயம் சுமார் 75 சதவிகித மக்களின் வாழ்நிலையைக் காப்பாற்றி வந்தது. கடந்த 20 ஆண்டுகளில் நாம்

First Published : 05 October 2012 01:25 AM IST

ஒரு காலகட்டத்தில் விவசாயம் சுமார் 75 சதவிகித மக்களின் வாழ்நிலையைக் காப்பாற்றி வந்தது. கடந்த 20 ஆண்டுகளில் நாம் பெற்ற நகர்ப்புற வளர்ச்சியால் விவசாயத்தை மட்டும் நம்பிவந்த மக்கள் மாற்றுத் தொழில்களை மேற்கொண்டுவிட்டதால் 2010-11 புள்ளிவிவரங்களின்படி இன்று சுமார் 50 சதவிகித மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர்.

ஒட்டுமொத்த ஜி.டி.பி. வருமானக் கணக்கில் விவசாயத்தின் பங்கு 14.5 சதவிகிதம் மட்டுமே. இந்திய ஏற்றுமதியில் 10.5 சதவிகிதம் வரை விவசாயம் பங்கேற்று வருகிறது. ஒரு பக்கம் விவசாயம் அழிந்து கொண்டிருந்தாலும் விவசாய விளைபொருள்களின் தேவை பெருகியவண்ணம் உள்ளது.

தொழில் வளர்ந்தால் போதுமா? ஒவ்வொரு மனிதனுக்கும் வயிறு நிறைய உணவு வேண்டுமே? உணவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டால் விர்ரென்று விலைவாசி ஏறும். விலைவாசி ஏறினால் ரிசர்வ் வங்கி கவர்னருக்கு ரத்த அழுத்தம் ஏறி, "வட்டியை உயர்த்துவேன்' என்று பயமுறுத்துவார். வட்டியை உயர்த்தினால் தொழில்துறை கலகலத்துப் போகும். இப்போது உணவு விலை ஏற்றம் காய்கறி - பழங்கள், பருப்பு, புரத உணவுகளான முட்டை - இறைச்சிகளில் ஏற்பட்டு உணவு விலைப் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அரிசி - கோதுமை விலை ஏற்றத்தால் அல்ல.

விவசாய விளைபொருள்களின் தேவை உணவில் மட்டுமல்ல; ஏற்றுமதி மற்றும் உணவுசார்ந்த தொழில்துறைக்குரிய கச்சாப்பொருள்களின் வழங்கலாகவும் விவசாயம் உள்ளது. மருத்துவத்துறைக்குரிய மூலிகைகளையும் விவசாயம் வழங்குகிறது.

எவ்வளவுதான் ஓர் அரசு விவசாயத்தைப் புறக்கணித்தாலும்கூட, இந்திய விவசாயத்தை அழிப்பதற்காகவும், அரசுத்துறை மூலதனங்களைத் தனியார்களுக்குத் தாரை வார்க்கவும், சில்லறை விற்பனையை வால்மார்ட்டுக்கு வழங்கவும் எத்தனை ரகுராமன் ராஜன் போன்ற அமெரிக்க - இந்தியப் பொருளாதார நிபுணர்கள் சிகாகோவிலிருந்து வந்தாலும்கூட, விவசாயத்தை அவ்வளவு எளிதாக அழித்துவிட முடியாது.

"ஒபாமாவின் கையாள்' ஒருவர் பிரதமரின் பொருளாதாரச் செயலராக நியமிக்கப்பட்டதன் எதிரொலியை நாடாளுமன்ற நடவடிக்கைகள் பிரதிபலித்துள்ளன. சில்லறை வர்த்தகம் பற்றியும், அரசுத்துறை மூலதனம் பற்றியும் அண்மையில் சிதம்பரமும் மன்மோகனும் பேசியுள்ளதை நினைத்துப் பார்த்தால், "பின்புலம்' என்னவென்று புரியும். எல்லா எதிர்ப்புகளையும் மீறி சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீடு அனுமதிக்கப்பட்டுவிட்டது.

இந்திய விவசாயம் சித்திரவதைகளுக்குள்ளாகிவிட்டதை விவசாயிகளின் தற்கொலை வளர்ச்சி எடுத்துக்காட்டினாலும், இந்திய விவசாயம் விமோசனம் பெறும் மார்க்கத்தைப் பற்றி நாம் யோசிப்பது நன்று.

விவசாயத்தில் இதுநாள்வரை நாம் கடைப்பிடித்து வந்த கொள்கையில் அரசு கொள்முதல் - வினியோகத்திட்டம் மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. குறைந்தபட்ச விலையைச் சற்று அதிகபட்ச விலையாக மாற்றி - நெல், கோதுமை, கரும்பு ஆகிய மூன்று பயிர்களுக்கு மட்டுமே

அரசுப்பணம் விரயமாகியுள்ளது. மொத்த ஜி.டி.பி. வருமான மதிப்பில் சுமார் 25 சதவிகிதம் விவசாயத்துக்குச் செலவானதில் மேற்கூறிய மூன்று பயிர்களுக்கு மட்டுமே காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கு என்று செலவழித்த பணம் விவசாயிகளுக்குச் செல்லாத வகையில் விவசாய உணவு மானியம் திசைமாறிச் சென்றுள்ளது. இருப்பினும்கூட குறிப்பாக அரிசிக்காகவும் கோதுமைக்காகவும் ஒதுக்கப்பட்ட உணவு மானியத்தால் - குறைந்தபட்ச விலையின் அதிகபட்ச உயர்வு காரணமாக நமது தேவைக்கு மேலாகவே பல லட்சம் டன்கள் கோதுமையும் நெல்லும் உணவு மானியத்துடன் ஆதரவு விலை கொடுத்துக் கொள்முதல் செய்து வாங்கியதெல்லாம் கொட்டிவைக்க இடமில்லாமல் குப்பையில் கொட்டப்படுவதைத் தடுக்க முடியுமா?

சமயங்களில் தொலைநோக்கு இல்லாத சில நல்ல கொள்கைகள் பயனற்றுப் போவதற்குரிய உதாரணம் இது. ஒவ்வோராண்டும் குறைந்தபட்ச ஆதரவு விலையின் அதிகபட்ச உயர்வு பிளஸ் போனஸ் காரணத்தால் விளைவதையெல்லாம் வாங்கி வாங்கிக் குப்பையில் கொட்டும் நிலைமையைத் தொடர்ந்து அனுபவிக்கிறோம். உணவுக் கொள்முதல் உரிமையை மறைமுகமாக வால்மார்ட்டுக்கு வழங்குவதினால் பிரச்னைகள் தீராது. மாற்று வழியை யோசிக்கலாம்.

ஒரு மனிதனின் உணவுத்தேவை பற்றிய புள்ளிவிவரமே புரட்டானது. அரிசி மற்றும் கோதுமையைத் தவிர, வேறு உணவுகள் கணக்கில் வருவது இல்லை. காலம் மாறிவிட்டது. நடுத்தர மக்கள் அரிசி, கோதுமைக்காக மட்டுமே பணம் செலவழிப்பதில்லை.

பருப்பு, காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், இறைச்சி என்று தமக்கு வேண்டிய புரதப்பொருள், தாதுப்புக்கள், வைட்டமின்கள் பெறவும் பணம் செலவழிக்கின்றனர்.

மேற்கூறிய தேவையைக் கருத்தில்கொண்டு வழங்கப்படும் உணவு மானியம் புரத உணவுக்கும் பங்கிடப்பட வேண்டும்.

பருப்பு, பால், முட்டை, காய்கறி - பழங்கள் உற்பத்தியை உயர்த்தும் விவசாய முதலீடுகளை உயர்த்த வழி காண வேண்டும்.

பொது விநியோகத்துக்காக நெல், கோதுமை எவ்வளவு தேவையோ அவற்றை மட்டுமே கொள்முதல் செய்து, மானியப் பணத்தை மேற்படி புரத உணவு முதலீடுகளாக மாற்றும் உருப்படியான கொள்கையை வரைய வேண்டும்.

நெல், கோதுமைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையின் அதிகபட்ச உயர்வுடன் போனஸ் வழங்கிக் கொள்முதல் என்ற பெயரில் உணவை வாங்கிக் குப்பையில் கொட்டுவதை நிறுத்தி, அதே குறைந்தபட்ச ஆதரவு விலையின் அதிகபட்ச உயர்வைப் பருப்பு வகை தானியங்கள், கம்பு, கேழ்வரகுப் பயிர்களுக்கு வழங்கி அதற்கான சேமிப்புக் கிட்டங்கிகளையும் கட்டிக் கொள்முதல்செய்து மக்களுக்கு வினியோகம் செய்யும்போது விவசாயிகள் நெல், கோதுமையை விடுத்து மேற்படி மாற்றுப்பயிர் சாகுபடியில் கவனம் செலுத்துவார்கள்.

உணவுப் பயிர்களின் சாகுபடிப் பருவம் தொடங்கும்போதே நமது தேவை, சேமிப்புக் கிட்டங்கிகளின் கொள்ளளவு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இவ்வளவுதான் நெல், கோதுமையில் இந்த ஆண்டுக் கொள்முதல் என்று முன்னறிவிப்பைச் செய்ய வேண்டும். அதே சமயம், உலர் தானியங்கள் மற்றும் பருப்பு வகைக் கொள்முதல் குறித்தும் முன்னறிவிப்பு செய்ய வேண்டும்.

அதிகமான தண்ணீர்ச் செலவும், மின்சாரச் செலவும் உள்ள நெல், கோதுமை, கரும்பு மூன்றையும் அளவுடன் சாகுபடி செய்து புரதச்சத்துள்ள பருப்பு வகை சாகுபடி, கம்பு, கேழ்வரகு போன்ற தானியவகைச் சாகுபடியில் தீவிர கவனம் செலுத்துவது காலத்தின் கட்டாயம்.

கரும்பை எடுத்துக்கொண்டால் அதன் பயன் சர்க்கரையும், சாராயமுமே. மேற்படி நுகர்வையும் அளவிட்டு மாற்றுப்பயிர் சாகுபடிக்குத் திட்டமிடலாம்.

கரும்பு பயிராகும் இடங்களில் காய்கறி, பழங்கள் சாகுபடி செய்யலாம்; அப்படிச் சாகுபடி செய்ததைச் சாகுபடியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை கிராமம்தோறும் உருவாக்கிஅதன் மூலம் விற்பனை செய்யலாம். அதற்கான ஆள் பலத்தை மகாத்மா காந்தி ஊரக வேலைக்காப்புறுதித் திட்டத்துடன் இணைத்துச் செயல்படலாம்.

பால் உற்பத்தி விஷயத்தில் "ஆவின்' கொள்முதல் நிலையங்களை ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக்கி சென்னையில் உள்ள "ஆவின்' கட்டுமானங்களை ஈரோடு, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, வேலூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்ட நகர்களிலும் அமைத்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் இன்று தனியார் பால் நிறுவனங்கள் அதிகமாகவும் "ஆவின்' கிளை நிறுவனங்கள் குறைந்தும் வருகின்றன. இந்த நிலை மாற வேண்டும். கறவை மாடு வைத்துள்ள விவசாயிகளுக்கு வேண்டிய தீவனங்களையும் மலிவு விலையில் "ஆவின்' வழங்க முன்வருமானால் பால் உற்பத்தி பெருகும்.

"அமுல்' நிறுவனத்தை உருவாக்கிய குரியன் அமரராகிவிட்டார். அவர் கற்றுத்தந்த வழியில் செயல்பட்டால் தமிழ்நாட்டில் "ஆவின்', சிகரத்தைத் தொடலாம். கர்நாடகம், மகாராஷ்டிர மாநிலங்களில் "அமுல்' கூட்டுறவுப் பால் விற்பனை சங்கத்துக்கு இணையாக அரசுத்துறை செயல்படுவதை ஆவின் கருத்தில்கொண்டு பால் விநியோகத்தில் தனியார் ஆதிக்கத்தைப் போட்டி மனப்பான்மையுடன் முறியடித்துப் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி விவசாயம் விமோசனம் பெற உணவு - விவசாய மானியங்களை மட்டுமே நம்பினால் விவசாயத்தின் பொருள் ""நெல் சாகுபடியும் கோதுமை சாகுபடியும்தான்'' என்ற நிலைமைதான் எஞ்சும்.

நாம் நல்லபடி நலவாழ்வைப் பெற நம் உணவில் புரத உணவுகள் தாதுப்பு வைட்டமின்கள் தரக்கூடிய பருப்பு வகைகள், கம்பு, கேப்பை, வரகு, தினையுடன், காய்கறி, பழங்கள், பால், முட்டை, இறைச்சி என்ற எல்லா அம்சங்களிலும் உற்பத்தியை உயர்த்த வேண்டும்.

நெல், கோதுமை, கரும்பு தவிர்த்து மேற்படி இதர உணவுகளுக்கும் வேண்டிய முதலீடுகளை உயர்த்த வேண்டும். ஏற்றுமதிப் பொருள்களில் கவனம் செலுத்த வேண்டும். பருப்பு, சமையல் எண்ணெய் இறக்குமதிகளைப் படிப்படியாகக் குறைக்கும் அளவில் உள்ளூரில் அவற்றின் உற்பத்தியை உயர்த்தத் திட்டமிட்டால் மட்டும் போதாது.

நெல்லுக்கும், கோதுமைக்கும் வழங்கப்பட்ட அதே "பேக்கேஜ்' திட்டம், புரத உணவுகளுக்கும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் தாராளமாக சாராயம் குடிக்கத் தமிழ்நாட்டில் "டாஸ்மாக்' கெட்ட உதாரணமாக உள்ளது.

அதுபோல் சத்துணவு - நல்லுணவு உற்பத்தியைப் பெருக்கும் நல்ல உதாரணத்தைத் தமிழ்நாடு முன்வைத்தால் மற்ற மாநிலங்கள் பின்பற்ற உதவலாம். வாழ்க பாரதம்.

## நாமக்கல்லில் 12 கோடி முட்டைகள் தேக்கம்

புரட்டாசி மாதம் காரணமாக நாமக்கல்லில் முட்டை விற்பனை சரிந்து 12 கோடி முட்டைகள் தேங்கியுள்ளதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தெரிவித்தது. கொள்முதல் விலையும் 15 காசுகள் குறைத்து ரூ.3.40 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இது குறித்து நாமக்கல் மண்டல என்இசிசி தலைவர் பி.செல்வராஜ் கூறியது:

புரட்டாசி மாதம் காரணமாக நாமக்கல் மண்டல முட்டை விற்பனையில் 15 சதம் சரிவு ஏற்பட்டுள்ளது. வழக்கமாக 6 கோடி முட்டைகள் தேங்கியிருக்கும். ஆனால், இப்போது 12 கோடி முட்டைகள் தேங்கியுள்ளன.

ஐப்பசி மாதம் தொடங்கியதும் முட்டை விற்பனை அதிகரிக்கக் கூடும் என்றார் அவர்.

4th oct 2012 P.M

## விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி

கரூரில் விதைச் சான்று துறை சார்பில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற இந்த பயிற்சிக்கு விதை ஆய்வு துணை இயக்குநர் ரங்கராஜன் தலைமை வகித்தார். மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் மா. சந்தானம், வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) இராம. சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் ச. மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விதைச் சான்று உதவி இயக்குநர் க. சேகர் விதைத் தரத்தின் முக்கியத்துவம், பயிற்சியின் அவசியம், விதைப்பண்ணை பதிவு செய்தல் ஆகியவை குறித்து விளக்கம் அளித்தார்.

விதைச் சான்று அலுவலர்கள் இரா. தண்டபாணி, து. தியாகராஜன், விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ரமேஷ் ஆகியோர் வயலாய்வு, விதைப் பண்ணை தள்ளுபடி, விதை சுத்திப்பணி, சான்றுப் பணி செய்தல் ஆகியவை குறித்து பயிற்சி அளித்தனர்.

விதைச் சான்று அலுவலர் இரா. தண்டபாணி வரவேற்றார். து. தியாகராஜன் நன்றி கூறினார்.

## அக்டோபர் முதல் வாரம் வரை நடுத்தர ரக நெல் விதைகளை விதைக்கலாம்'

அக்டோபர் மாத முதல் வாரம் வரை நடுத்தர வயதுடைய நெல் விதைகளை விதைக்கலாம் என தஞ்சாவூர் வேளாண் வல்லுநர் பேரவை பரிந்துரை செய்துள்ளது.

இதுகுறித்து இப்பேரவையின் வ. பழனியப்பன் தெரிவித்திருப்பது:

'தாய்லாந்தில் உள்ள மண்டல ஒருங்கிணைந்த பல்முனை பேரழிவு முன்னெச்சரிக்கை முறைமையிலிருந்து தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு தனிப்பட்ட முறையில் பத்து நாள்களுக்கான வானிலை முன்னறிவிப்பு அக். 2-ம் தேதி பெறப்பட்டது. அதில், அக். 6-ம் தேதி வரை குறிப்பிடும்படியாக மழை இருக்காது என்றும், அக். 7 முதல் 11-ம் தேதி வரை அதிக மழை இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அக். 6-ம் தேதிக்குள் காய்ந்த விதையை புழுதியில் விதைக்கலாம். சேற்றில் நேரடி நெல் விதைப்பு செய்வது பாதுகாப்பானது என்பதால், உடனடியாக நடவு வயலை சேறடித்து சமன்படுத்தி முளைகட்டிய இரண்டாம் கொம்பு நெல் விதையை விதைக்க வேண்டும்.

அடுத்து வரும் அக். 7 முதல் 11-ம் தேதிக்குள் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், இந்த நாள்களில் நாற்று விடுதலையும், சேற்றில் நேரடி நெல் விதைப்பையும் தவிர்ப்பது அவசியம். மேலும், அறுவடை நிலையில் உள்ள குறுவை பயிரையும் அக். 6-ம் தேதிக்குள் அறுவடை செய்து கொள்வது பாதுகாப்பானது.

இனிமேல் நீண்டகால வயதுடைய நெல் ரகங்களை விதைக்கக் கூடாது. அவ்வாறு விதைத்தால் அந்தப் பயிர் பூக்கும் தருணத்தில் ஆற்று நீரும், மழையும் இன்றி பாதிப்புக்கு உள்ளாக வாய்ப்புகள் அதிகமுள்ளன. எனவே, நீண்ட கால வயதுடைய நெல் ரகங்களை இனி நாற்று விடவோ, நேரடியாக விதைக்கவோ கூடாது.

அக்டோபர் மாதம் முதல் வாரத்துடன் நடுத்தர வயதுடைய நெல் ரகங்கள் விதைப்பதை முடித்துக் கொள்ள வேண்டும். விதைப்பை நீட்டித்தால் பூக்கும் பருவத்தில் ஆற்று நீரும், மழையும் இன்றி பயிர் சேதமடைய அதிக வாய்ப்புள்ளது.

எனவே, இந்த வாரத்தில் நேரடியாக புழுதியில் விதைக்க முடியாதவர்கள் ஆற்றில் நீர் வந்த இடங்களில் நடவு வயலை தயார் செய்து நன்கு சமப்படுத்தி ஏக்கருக்கு 6 கிலோ முளைக்கட்டிய இரண்டாம் கொம்பு விதையைச் சேற்றில் விதைத்தால் நாற்றங்கால், நடவு செலவு மிஞ்சுவதுடன் ஏறத்தாழ 250 மி.மீ. தண்ணீரை சேமிக்கலாம். இதன் மூலம், பயிரின் வயதும் குறையும். இப்போது, இருக்கும் ஒரே வழி இதுதான். காலதாமதம் ஏற்படும்போது பின் பருவத்தில் பயிர் பாதிப்படைய அதிக வாய்ப்புள்ளது. எனவே, நாற்று விடுதலை தவிர்த்து நேரடியாக விதைப்பதே சிறந்தது.

அக்டோபர் 2, 3-வது வாரத்தில் எந்த வயதுடைய ரகத்தையும் விதைப்பது சாதகமாக இருக்காது. அக்டோபர் கடைசி வாரத்தில் விதைக்க நேர்ந்தால் குறுகிய கால வயதுடைய நெல் ரகங்களை விதைக்கலாம். அல்லது நாற்று நடவு செய்யலாம்.

எனவே, பயிரின் வயதையும், தண்ணீர் கிடைத்த பிறகான காலத்தையும், மழை பொழிவின் முன்னறிவிப்பையும் கருத்தில் கொண்டு என்ன ரகம்? எப்போது விதைப்பது? என்பதை முடிவு செய்ய வேண்டும்' என்றார் பழனியப்பன்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 72.18 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 72.18 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 9,881 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 14,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 6,001 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 801 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,017 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,515 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## விவசாயிகள் கூட்டம்

செய்யாறை அடுத்த வேளியநல்லூர் கிராமத்தில் விவசாயிகள் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை வகித்துப் பேசுகையில், உணவுப் பாதுகாப்பு முகமை திட்டத்தின் கீழ் விரைவு படுத்தப்பட்ட பயறு பெருக்கத் திட்டம், சுமார் 100 ஹெக்டர் பரப்பளவில் பல்லி, வேளியநல்லூர், காழியூர் ஆகிய கிராமங்களில் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றார்.

திருவண்ணாமலை வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித், பயறு சாகுபடி முறைகள், மண் மாதிரி எடுத்து அதன் அடிப்படையில் உரம் வழங்கப்படுவது குறித்தும் விளக்கினார்.

மேலும் அவர் பேசுகையில், பயறு சாகுபடி செய்யும் பயனாளிகளுக்கு இத் திட்டம் மூலம் முழு மானியத்தில் விதை, பயிர்ப் பாதுகாப்பு மருந்து இடு பொருள்கள் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.55, சென்னையில் ரூ.3.62.

கறிக்கோழி

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.60, முட்டைக் கோழி கிலோ ரூ.51.

## எலச்சிபாளையத்தில பயிர் இன்சூரன்ஸ் பிரீமியம் வசூலில் சாதனை

திருச்செங்கோடு எலச்சிபாளையம் வட்டாரத்தில் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் ரூ 3.5 லட்சம் பிரீமியம் வசூலித்து வேளாண்துறை சாதனை புரிந்துள்ளது.

எலச்சிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் பயிர் இன்சூரன்ஸ் திட்ட சிறப்பு விழிப்புணர்வு முகாம் புதன்கிழமை நடந்தது. மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிலக்கடலை மற்றும் பாசிபபயறு ஆகிய மானாவாரி பயிர்களுக்கு காப்பீடு செய்ய சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் துரைசாமி தலைமை வகித்தார். அட்மா திட்ட தலைவர் செங்கோட்டுவேலு முன்னிலை வகித்தார். சென்னை யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் மேலாளர் பிரேமா முகிலன், கோட்ட மேலாளர் நஞ்சப்பன, நாமக்கல் வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் ஆகியோர் பேசினர்.வேளாண் உதவி இயக்குனர் முரளீதரன் வரவேற்றார். பிரீமீய.ம் பற்றிய விபரங்களை வேளாண் அலுவலர் கோமதி விளக்கினார். இநத முகாமில் கோக்கலை, கொன்னையார், மோளியப்பள்ளி, முசிறி, பொம்ம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 500 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதுவரை இல்லாத அளவிற்கு ரூ 3.5 லட்சம் பிரீமியம் வசூலிக்கப்பட்டது. வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தேவைப்பட்ட ஆவணங்களை வழங்கினர். காப்பீட்டு நிறுவன அலுவலர் ஆனந்தகுமார் நன்றி கூறினார்.

## ஆவின் நிறுவனத்திற்கு ரூ.1.5 கோடியில் நவீன இயந்திரம்

கிருஷ்ணகிரி ஆவின் பால் நிறுவனத்திற்கு ரூ.1.5 கோடியில் நவீன இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரியில் உள்ள ஆவின் பால் நிறுவனம் தருமபுரி கிருஷ்ணகிரி ஆகிய இரு மாவட்டங்களில் கால்நடை விவசாயிகளிடமிருந்து பால் கொள்முதல் செய்து பால், தயிர், மோர், பால்கோவா உள்ளிட்ட பொருள்களை தயாரித்து உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

இந்த நிறுவனத்தில், சீரான சமன்படுத்தப்பட்ட பால் கிடைத்திட, நவீன இயந்திரங்கள் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இந்த இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் பூஜாகுல்கர்னி புதன்கிழமை இயக்கி பணியினை தொடக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியது: இந்த நவீன இயந்திரங்கள் 10 லிட்டர் பாலை சமன்படுத்தும். மேலும் பால் அடர்த்தியாகவும், முன்பை காட்டிலும் வெண்மையாகவும் கிடைக்க செய்யும். இந்த பால் எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டது. இயந்திரங்களை வருகையால் ஏற்கெனவே விற்கப்படுகிற விலையிலிருந்து எந்த மாற்றமும் இருக்காது. பொதுமக்களின் நலன் கருதி ஆவின் நிறுவனம் தரமான பால் மற்றும் பால் பொருள்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது. எனவே, பொது மக்கள் ஆவின் நிறுவனத்தின் பால், தயிர், நெய் மற்றும் பால்கோவா உள்ளிட்ட பொருள்களை வாங்கி நிறுவனத்திற்கு மேலும் தங்களது ஆதரவை தர வேண்டும் என்றார் ஆட்சியர்.

முன்னதாக, ஆவின் பணியாளர்களுக்கு ஆட்சியர் பூஜாகுல்கர்னி சீருடைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், ஒன்றிய பொது மேலாளர் கொம்பையன், துணைப்பதிவாளர் (பால்வளம்) ராமச்சந்திரன், துணை மேலாளர் (உற்பத்தி) தியாகராஜன், பொது மேலாளர் (கால்நடை பராமரிப்பு மற்றும உற்பத்தி) மங்கையர்கரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நெற்பயிரை தாக்கும் பூஞ்சான நோய்களும் அதனை கட்டுப்படுத்தும் முறைகளும்!

நெல் சாகுபடியில் நோய்கட்டுபாடு மிகவும் அவசியமாகும். நெற்பயிரை குலை நோய், இலைப்புள்ளி நோய், இலை உறை கருகல் நோய்,கதிர் உறை அழுகல் நோய், நெல் மணி அழுகல் நோய் போன்ற பல்வேறு நோய்கள் தாக்குகின்றன. இவை நெல் ரகம், சீதோஷ்ண நிலை, சாகுபடி முறை போன்ற பல்வேறு காரணங்களுக்கேற்ப நோய்களின் வகை, தாக்கத்தின் அளவு ஆகியவை மாறுபடும். இந்த நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை குறித்து கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பையூர் மண்டல வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலை நோயியில் துறை உதவி பேராசியர் கி.கல்பனா கூறும் வழிமுறைகள்.

குலை நோய் அறிகுறிகள்: இந்த நோய் நாற்றங்காலில் தொடங்கி கதிர் விடும் பருவம் வரை எல்லா நிலைகளிலும் தாக்குகிறது. நோயின் அறிகுறிகளை இலை, கதிரின் கழுத்தப் பகுதி மற்றும் தானிய விதைகளின் மீது காணலாம். நோயின் தொடக்க நிலையில் சிறிய ஊதா கலந்த பச்சை நிறத்தில் புள்ளிகளாக தோன்றி, பின்னர் நீள் வடிவத்தில் சாம்பல் நில மையத்தையும், பழுப்பு நிற ஓரத்தையும் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும். நோய் வளர்ச்சி அடைந்த நிலையில் இலைப்புள்ளிகள் ஒன்று சேறுவதால் இலைகள் காய்ந்து விடுகின்றன. அதே மாதிரியான புள்ளிகள் இலை உறையின் மீதும் தோன்றுகின்றன. கடுமையாக தாக்கப்பட்ட நாற்றங்கால் மற்றும் நெய் வயல் எரிந்து போனபோல தோற்றமளிக்கின்றன. நோய் தாக்கப்பட்ட கதிர் பகுதியின் கழுத்துப்பகுதி உடைந்து விடுகின்றது.

மேலாண்மை (கட்டுப்படுத்தும் முறை): நோய் எளிதில் தாக்கும் ரகங்களை பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். கார்பென்டசிம் அல்லது திரம் (2 கிராம் 1 கிலோ விதைக்கும்) போன்ற பூசணக்கொல்லி கொண்டு விதை நேர்த்தி செயவதன் மூலமும் கார்பென்டசிம் 200 கிராம் அல்லது டிரைசைக்லோஸ் 400 கிராம் அல்லது கார்பென்டசிம் 200 கிராம் (ஒரு ஹெக்டருக்கு) தெளிப்பதின் மூலம் கட்டுப்படுத்தலாம்.

இலைப்புள்ளி நோய்: பயிரின் எல்லாப் பருவங்களிலும் இந்த நோய் தாக்கும் பழுப்பு நிற சிறு புள்ளிகளாக இலைகளில் தோன்றி பின்னர் பெரிதாகி புள்ளிகள் இணைந்து பெரிய புள்ளிகளாக தோன்றும். இதனால் இலை கருகி விடும்.இந்த நோய் தாக்குவதால், விதை முளைக்கும் திறன் குறைகிறது. இளம் நாற்று இறந்து விடும். மேலும் இது தானிய விதைகளின் தரத்தையும் எடையையும் குறைக்கிறது.

மேலாண்மை: வயல் மற்றும் வரப்புகளை களையின்றி வைத்திருத்தல், நோய் எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்களை பயிரிடுதல், திரம் அல்லது கோப்டன் அல்லது கார்பென்டசிம் (2 கிராம் 1 கிலோ விதைக்கு) கொண்டு விதை நேர்த்தி செய்தல் மற்றும் மேங்கோசெப் 80 கிராம் அல்லது கேப்டபால் 40 கிராமை 8 சென்ட் நாற்றங்காலுக்கும், நடவு வயலில் ஹெக்டருக்கு கார்பென்டசிம் 250 கிராம் அல்லது மேங்கோசெப் 1 கிலோ அல்லது புரப்பிகொனசோல் 200 மி.லி தெளிப்பதன் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்தலாம்.

இலை உறை கருகல் நோய்: பயிரை தூர் விடும் சமயத்திலிருந்து கதிர் விடும் சமயம் வரை தாக்குகிறது. முதலில் இந்நோய் தண்ணீருக்கு அருகில் உள்ள இலைகளில் காணப்படும். பிறகு நீள் வட்ட வடிவ பச்சை கலந்த பழுப்பு நிறப்புள்ளிகளாக காணப்படும். பிறகு, இந்த புள்ளிகள் பெரிதாகி சாம்பல் நிற மையப்பகுதியையும் பழுப்பு நிற ஓரப்பகுதியையும் கொண்டு இருக்கும்.

பிறகு இந்த புள்ளிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மேல் நோக்கி பரவி இலை உறை கருகல் நோயை ஏற்படுத்துகிறது.

மேலாண்மை: அதிக நெருக்குமாக பயிரை நடவு செய்யாமல், போதிய இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். நோய் தாக்கிய வயலிலிருந்து அறுவடைக்குப் பின்னால் கிடக்கும் பயிர் பாகங்களை அழுத்து விட வேண்டும். வயல் வெளிகளையும் வரப்புகளையும் களைகள் இன்றி சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். தழைச்சத்து உரத்தை பிரித்து இடுதல் அவசியம். யூரியாவை வேப்பம்புண்ணாக்குடன் கலந்து இடுதல் வேண்டும். நோய் தாக்கிய வயலிலிருந்து அடுத்த வயல்களுக்கு பாசன நீர் செய்வதை தவிர்க்க வேண்டும். நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் பசுந்தாள் உர பயிரை கடைசி உழவில் மடக்கி உழுவதால் மண்ணிலுள்ள பூசண வித்துககளை அழுக்கலாம். ஹெக்டருக்கு கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது புரப்பிகொனசோல் 200 மி.லி மருந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

கதிர் உறை அழுகல் நோய்: இந்த நோய், கதிரை மூடியுள்ள இலை உறையை தாக்கும். இப்பூசணம் நீள வட்ட அல்லது ஒழுங்கற்ற சாம்பல் பழுப்பு நிற புள்ளிகளாக தோன்றும். இந்த புள்ளிகள் பெரிதாகி சாம்பல் நிற மையத்தையும் பழுப்பு நிற ஓரப்பகுதியையும் கொண்டிருக்கும். இந்த நோய் தாக்கத்தால் கதிர்கள் இலை உறையை விட்டு வெளியே வராது.

மேலாண்மை: பரிந்துரையின் படி விகிதத்தில் உரங்களை இடுதல், சரியான இடைவெளியில் பயிர்களை நடுதல் மற்றும் கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது குளோரோதிலோனில் (1 கிலோ ஒரு ஹெக்டருக்கு) என்ற அளவில் மருந்தை பூட்டைப் பருவத்தில் 15 நாள்கள் இடைவெளியில் விட்டு இரு முறை தெளிக்க வேண்டும்.

நெல்மணி அழுகல் நோய்: இந்த நோய் நெல் மணிகளில் மட்டுமே காணப்படும். நோய் தாக்கிய நெற்கதிரில் உள்ள நெல் மணியும் பூஞ்சானத் தாக்குதல் மஞ்சள் நிறமடைந்துவிடும். முதலில் இளம் பூஞ்சான வித்துக்கள் நெல்மணிகளை சுற்றி மஞ்சள் நிறத்தில் இருக்கும். பருவ நிலை மாற்றத்திற்கேற்ப நெற் பயிரில் 50 சதம் நெல் மணிகள் வரை பால்ஸ் சுமட் உருண்டைகளாக மாறிவிடும். இதனால் நெல் மணியின் தரம் குறைந்து மணிபிடிப்புத் திறனும் குறைந்து விடும்.

மேலாண்மை: நோய் தாக்கதாத விதைகளை பயன்படுத்துதல், முன் கூட்டி நடவு செய்தல், வயல்கள் மற்றும் வரப்புகளை சுத்தமாக வைத்திருத்தல், அதிக தழைச் சத்து இடுவதை தவிர்த்தல், அறுவடை செய்யும் போது நோய் தாக்கிய நெல்மணிகளை அகற்றுல் ஆகியவற்றின் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்தலாம். மேற் கண்ட வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நெற் பயிரில் அதிக அளவு சாகுபடி செய்து லாபம் ஈட்டலாம். தொடர்புக்கு: 04343-290600.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

05.10.2012 A.M

## பிசான நெல் நடவுக்கு முன் பசுந்தாள் உரப்பயிர் விதைப்பு

தென்காசி : "பிசான நெல் நடவுக்கு முன் பசுந்தாள் உரப்பயிர் விதைப்பு செய்ய வேண்டும்' என கீழப்பாவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நல்ல முத்துராசா கூறியுள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""நமது மண் வகைகளில் கரிம பொருட்கள் அதாவது அங்ககப் பெருட்களின் அளவும், தழைச்சத்தின் அளவும் மிகவும் குறைவாக உள்ளது. மண் வள மேம்பாட்டில் இவையிரண்டும் இரண்டு கண்கள். மண் வளத்தை மேம்படுத்துவதற்கு கரிமப் பொருள் மற்றும் தழைச்சத்தின் அளவை அதிகப்படுத்த வேண்டும். கரிம தழைச்சத்து பெறுவதற்கு பசுந்தாள் உரமிடுதல் மிகமிக அவசியம். பசுந்தாள் பயிர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று பயறு வகை செடி, மற்றொன்று பயறு வகை மரம், சீமை அகத்தி, தக்கைப்பூண்டு, சணப்பு, நரிப்பயறு, தட்டைப்பயறு போன்றவை ஆகும்.

பசுந்தாள் உரங்களை மண்ணில் இடும்போது அது மண்ணில் உள்ள கண்ணுக்கு புலப்படாத பல கோடிக்கணக்கான நுண்ணுயிர்களின் தாக்குதலுக்கு இலக்காகிறது. இவை சிதைக்கப்படும் போது அப்பயிர் வகைகளில் உள்ள பேரூட்டங்கள் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் வெளியாகி பயிர்கள் செழித்து வளர உதவுகின்றன. நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரிக்கும் போது அவைகளிலிருந்து பலவிதமான அங்கக அமிலங்களும் வளர்ச்சி ஊக்கிகளும், நொதி மற்றும் சர்க்கரைப் பொருட்களும் வெளிப்பட்டு மண்ணில் கரையா வடிவத்திலிருக்கும் ஊட்டச்சத்துக்களை கரைத்து எளிதில் பயிர்கள் எடுத்துக் கொள்ளும் வடிவங்களுக்கு மாற்றுகிறது. மேலும் பயிர் வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

தக்கைப் பூண்டு போன்ற பசுந்தாளுரத்தின் இலைகளில் காணப்படும் திரவம் அமிலத்தன்மை கொண்டதாகும். இதனால் இலைகளை உரமாக உபயோகிக்கும் பொழுது நிலங்களை எளிதாக சீர்திருத்தம் செய்கின்றன. நிலத்தில் இடும் ரசாயன உரங்கள் ஆவியாதல், களியோடு சேர்ந்து நிலை நிறுத்தப்படுதல், பாசன நீருடன் கரைந்து வெளியேறுதல் போன்ற பலவித இழப்புகளை

தடுப்பதோடு பயிருக்கு உணவுச் சத்துக்களை சீராக கிடைக்க செய்தல் போன்றவற்றை பசுந்தாளுரம் இடுவதன் மூலம் சரிசெய்யலாம்.

தற்போது கீழப்பாவூர் பகுதியில் பிசான பருவ நெல் நடவிற்கு முன் தக்கைப்பூண்டு நெல் வயல்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தக்கைப்பூண்டு விதைகளை ஏக்கருக்கு 20 கிலோ என்ற அளவில் விதைப்பு செய்து 45 முதல் 60 நாட்களில் மடக்கி உழுதோ அல்லது நடவிற்கு 15 நாட்கள் முன்பாக வெளியிலிருந்து கொண்டு வந்து வயலில் இட்டு மண் வளத்தை பெருக்கி பிசான நெல் பயிரில் அதிக மகசூல் பெறலாம். தக்கைப்பூண்டு உரப்பயிர் இடுவதால் 150 முதல் 225 கிலோ தழைச்சத்து நிலத்திற்கு கிடைக்கிறது. பசுந்தளை உற்பத்தியாக 8.5 டன் முதல் 10 டன் வரை கிடைக்கிறது.

எனவே விவசாயிகள் பிசான நெல் சாகுபடிக்கு முன் பசுந்தாள் உரப் பயிரான தக்கைப்பூண்டு விதைப்பு மேற்கொண்டு மண் வளத்தை பெருக்கி அதிக மகசூல் பெற வேண்டும்" என வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராசா அறிக்கையின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நேரடி நெல் விதைப்பு முறையில் அதிக விளைச்சல் பெற யோசனை: வறட்சியை வெல்ல முடியும்

திருத்துறைப்பூண்டி: வெள்ளம், வறட்சி காலங்களிலும் பொருளாதார இழப்பு ஏற்படாமல். நேரடி நெல்விதைப்பு முறையில், அதிக மகசூல் எடுப்பது குறித்து, நமது நெல்லை காப்போம் அமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

டெல்டா பாசன மாவட்டங்களில் தற்போது போதிய காவிரி நீரின்றி குறுவை, சம்பா நெல் சாகுபடி பாதித்துள்ளது. இதனால், உச்சநீதிமன்றத்தை அணுகி, முறையிட்டு கர்நாடக அரசுடன், தமிழக அரசு சட்டப்பூர்வ போராட்டத்தை நடத்தி வருகிறது. இத்தகைய வறட்சி நிலவும் சூழலிலும், நேரடி நெல் விதைப்பு முறையில் அதிக மகசூல் பெற முடியும் என, வேளாண் வல்லுனர் நம்பிக்கையூட்டியுள்ளார்.

இதுகுறித்து, நமது நெல்லை காப்போம் அமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறியதாவது:

மேட்டூர் அணையில் காலதாமதமாக தண்ணீர் திறந்தாலும், ஒரு போக சம்பா சாகுபடிக்கு சரியான தருணத்தில் திறந்து விடப்பட்டு, கடைமடை பகுதிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் நேரடியாக நெல் விதைக்கப்பட்ட வயலில் நீர் பாய்ச்சி விதையை முளைக்க வைத்து நிலத்தை காய்ச்சலும், பாய்ச்சலுமாக விவசாயிகள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விதை முளைக்க, தண்ணீர் வைத்ததிலிருந்து, 25 தினங்களுக்கு பின், தண்ணீர் வைத்து துவக்க நிலையிலேயே களையை நேரடியாக எடுக்க வேண்டும். இவ்வாறு, வயலில் களையை நேரடியாக வயலில் இறங்கி எடுப்பதன் மூலம், கால்மிதியில் அறுபட்டு மிக வேகமாக பயிர் வளரும்.
இதற்கு மாறாக களைக்கொல்லியை பயன்படுத்தினால், களை அழிவதை விட பயிர் வளர்ச்சி மகசூல் அதிகம் பாதிக்கப்படும். நிலத்திலுள்ள நுண்ணுயிர்களும் அழிந்து விடும். அதனால் களைக்கொல்லியை பயன்படுத்த வேண்டாம். இவ்வாறு, நேரடியாக களை எடுத்த நிலத்தில் ஏக்கருக்கு, 20 கிலோ மண்புழு உரம் அல்லது, 20 லிட்டர் பஞ்சகவ்யா, 10 அன்னக்கூடை தொழுயுரத்தில் கலந்து, மூன்று நாள் வைத்து தெளிக்க வேண்டும். இச்சமயத்தில் பயிர் நன்றாக வளரும்.
அடுத்த, ஒரு மாதத்தில், பத்து லிட்டர் தண்ணீருக்கு, 300 மி.லி., பஞ்சகவ்யா கலவையை, ஒரு ஏக்கருக்கு, 10 டேங்க் ஸ்பிரே செய்ய வேண்டும். மேலும் அடுத்த, 15 நாட்களில், 10 லிட்டர் தண்ணீருக்கு, 400 மி.லி., மூலிகை பூச்சி விரட்டி கலவையை ஏக்கருக்கு, 10 டேங்க் வீதம் ஸ்பிரே செய்ய வேண்டும். இத்தகைய தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தால் வறட்சி, வெள்ளத்தையும் தாங்கி பயிர் விளையும்.
இவ்வாறு அவர் கூறினார்.

விஷம் இல்லா உணவுக்கு வழி!
ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறுகையில்,""வயலில் வழக்கமாக, தண்ணீரை தேக்கி வைப்பர். ஆனால், இம்முறையை கைவிட்டு காய்ச்சலும் பாய்ச்சலுமாக பயிர் இருப்பதால் தண்ணீர் தேவை குறையும். ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி விஷங்களுக்கான பொருளாதார இழப்பை தடுக்கவும் முடியும். இதனால், ஒருபோதும் மகசூல் குறையாது. குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம். தண்ணீர் சிக்கனம் மட்டுமின்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நஞ்சில்லா உணவும் கிடைக்கும். மேலும் விபரம் அறிய திருத்துறைப்பூண்டி தாலுகாவிலுள்ள ஆதிரெங்கம் இயற்கை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் டெலிஃபோன் நம்பர்-04369 220954, மொஃபைல் போன்-98426 07609, 94433 20954 ஆகியவற்றை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## பயிற்சி முகாம்

திண்டுக்கல்:பிற்படுத்தப்பட்ட பகுதி மானிய திட்டத்தில், மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் திண்டுக்கலில் நடந்தது.உதவி

செயற்பொறியாளர் ராஜ்÷மாகன் தலை மை வகித்தார். தொழில்நுட்ப உதவியாளர் அருணாசலம் முன்னிலை வகித்தார். இளநிலைப் பொறியாளர் முனியப்பன் வரவேற்றார்.ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கவேலு, ஊராட்சிகள் சட்டம், செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்துப் பேசினார். இளநிலை பொறியாளர் மதிவாணன், ஜி.பி. எஸ்., கருவியின் பயன்பாடு, செயல்பாடுகள் குறி த்து விளக்கினார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்டதென்னை மரங்கள் அழிப்பு

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் வெட்டப்பட்டு, வியாபாரிகள் மூலம் டிம்பர் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆண்டிபட்டி தாலுகாவில் வருஷநாடு, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை உட்பட வைகை கரையோர கிராமங்கள், நிலத்தடி நீர் அதிகம் உள்ள மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப்பகுதியில் உள்ள பல கிராமங்களில், ஆயிக்கணக்கான தென்னை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுக்கு முன்பு தென்னை மரங்களில் சிலந்தி நோய் தாக்கம் ஏற்பட்டு உற்பத்தி பாதித்தது. இந்த ஆண்டு ஆண்டிபட்டி பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னை மரங்களில் விவசாயிகள் எதிர்பார்த்த உற்பத்தி கிடைக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்டு, ஓங்கி உயர்ந்து வளர்ந்த தென்னை மரங்களில் காய்ப்புத்தன்மை குறைந்து விட்டது. மகசூல் குறைந்த தென்னை மரங்களை பராமரிப்பதால் விவசாயிகளுக்கு தொடர் நஷ்டம் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்ட விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பலன் குறைவாக தரும் தென்னை மரங்களையும்,வறட்சியால் காய்ந்த தென்னை மரங்களையும் வெட்டி டிம்பர் கடைகளுக்கு அனுப்புகின்றனர். ஒரு சதுர அடி தென்னை 15 ரூபாய் வரை விலை போகிறது.

## விவசாய கடன்மேளா

திருவாடானை,:திருவாடானையில் விவசாயிகளுக்கான லோன்மேளா முகாம் நடந்தது. கூட்டுறவு இணைபதிவாளர் ஆரோக்கியசுகுமார் திறந்து வைத்தார். கலெக்டர் நந்தகுமார் பார்வையிட்டார். மாவட்ட பதிவாளர் கிருஷ்ணகுமார், கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் ரமணிதேவி, தாசில்தார் பழனியாண்டி பங்கேற்றனர்

## பழைய கடனை செலுத்தி புதுகடன் பெற அழைப்பு

காரியாபட்டி: ""பழைய கடனை செலுத்தி,புது கடன் பெற,வியாபாரிகள் முன் வர வேண்டும்," என, பாண்டியன் கிராம வங்கி சேர்மன் சேவியர் திலகராஜ் கூறினார்.காரியாபட்டியில் நடந்த வர்த்தக சங்க ஆண்டு விழாவில், வியாபாரிகளுக்கு கடன் உதவி வழங்கிய அவர் பேசுகையில்,""கிராம, நகர் பகுதி சிறு வியாபாரிகளின் நலனுக்காக, சிறுவணிக கடன் திட்டம் துவங்கப்பட்டது. இத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, ஆயிரக்கணக்கான வியாபாரிகள் பயனடைந்துள்ளனர். வங்கி கொடுக்கும் கடனை, உரிய காலத்தில் செலுத்தி, புதிய கடன்களை பெற, வியாபாரிகள் முன்வர வேண்டும்," என்றார். தலைவர் சுப்பையா தலைமை வகித்தார்.செயலாளர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி தலைவர் காந்திமதி, மாநில செயற்குழு உறுப்பினர் பழனி, பாண்டியன் வங்கி பொது மேலாளர் சிதம்பரம், மண்டல மேலாளர் டாக்டர் நெடுஞ்செழியன், முதுநிலை மேலாளர் பாலன், கிளை மேலாளர் சுப்பிரமணியன், தொழிலாளர் உதவி ஆய்வாளர் மின்னல் கொடி, துணைத் தலைவர் நைனா முகமது, துணை செயலாளர் ராஜ், துணை பொருளாளர் அழகர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சாமுவேல், கண்ணன், சுப்பிரமணி, துரைராஜ், வீரையா, தமிழரசன், புயல்ராஜ், ராமதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிர்வாகக் குழு உறுப்பினர் முருகேசபாண்டியன் நன்றி கூறினார்.

## துவரை சாகுபடியில் நாற்று விட்டு நடும் முறை அறிமுகம் :ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் வரை லாபம்

கோபிசெட்டிபாளையம்: துவரை சாகுபடியில் நாற்று விட்டு, நடும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் லாபம் ஈட்டலாம். கோபி வட்டாரத்தில் மானாவாரி மற்றும் வரப்பு பகுதியில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. துவரையை நேரடியாக விதையை ஊன்றுவது வழக்கம். தற்போது, நெற்பயிரைப் போல், துவரையையும் நாற்று விட்டு நடும் முறை அறிமுகமாகி உள்ளது.

கோபி வோளண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:

பொதுவாக, பயறு வகைகளை நாற்று நடும் பழக்கம் இல்லை. துவரை போன்ற பயறுகளை, நாற்று விட்டு, நடும் போது அதிக மகசூல் கிடைப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இத்திட்டத்துக்காக தமிழக அரசு, ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மானியம் வழங்குகிறது. ஈரோடு மாவட்டத்தில் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை ஆடிப்பட்டம், செப்டம்பர் முதல் நவம்பர் வரை

புரட்டாசிப் பட்டம் என இரண்டு பட்டங்களில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. நாற்று விட்டு நட, 130 நாட்கள் வயதுள்ள, "ஆர்.ஜி.,7' என்ற துவரை ரகம் புரட்டாசி பட்டத்துக்கு ஏற்றதாகும். ஏக்கருக்கு ஒரு கிலோ தேவைப்படும்.

மணல், மண் மற்றும் எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து ஐந்து அங்குலத்துக்கு மூன்று அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்ப வேண்டும். ஒரு பாலித்தீன் பைக்கு ஒரு விதை என்ற விதத்தில் விதைக்க வேண்டும். விதைத்த எட்டாவது நாள் விதை முளைத்து வரத்துவங்கும். 15வது நாள் நன்கு முளைத்துவிடும். 20வது நாள் களை எடுக்க வேண்டும். துவரை நாற்றங்காலை நிழற்பாங்கான இடத்தில் அமைத்தல் அவசியம். தினசரி பூவாளி கொண்டு நீர் தெளித்தல் வேண்டும். விதைத்த, 30வது நாள், நடவு செய்ய நாற்றுகள் தயார் நிலைக்கு வரும்.

துவரை நடவுக்கு மூன்று வாரங்களுக்கு முன் நன்கு மக்கிய, ஐந்து டன் எரு அல்லது, 2.5 டன் மண் புழு உரம் இட வேண்டும். வரிசைக்கு வரிசை, ஐந்து அடிக்கு, மூன்று அடிக்கு என்ற இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வாழை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும்போது ஊடுபயிராகவும் செய்யலாம்.

காய்கள், 80 சதவீதம் முதிர்ச்சி அடைந்தவுடன், செடிகளை அறுத்து, கட்டி வைத்து, பின் வயலில் காய வைக்க வேண்டும். பிரித்தெடுக்கப்படும் விதைகளை 10 சதவீத ஈரப்பதம் வரும் வரை காய வைக்க வேண்டும்.

சாதாரணமாக நேரடியாக துவரை விதைப்பதால் ஏக்கருக்கு, 300 கிலோ மகசூல் கிடைக்கிறது. நாற்று விட்டு, நடவு செய்வதால் ஏக்கருக்கு, 1,000 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்.

பச்சை துவரைக்காய் பெங்களூருக்கு உணவுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கோபி வட்டாரத்தில், 23 இடங்களில், செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## வாழைத்தார் விலை வீழ்ச்சி

கோபிசெட்டிபாளையம்: வாழை அறுவடை நேரத்தில், 43 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கதளி, 16 ரூபாயாக விலை குறைந்துள்ளது.

வாழை சீஸன் நேரத்தில், கோபி வேளாண் விற்பனை சங்கத்துக்கு, 7,000 முதல், 8,000 தார் வரை வரத்தானது. வாழை வரத்து அதிகரிப்பு காரணமாக, மூன்று மாதத்துக்கு விற்கப்பட்ட விலையை விட, பல மடங்கு விலை வீழ்ச்சி கண்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, கதளி கிலோ, 16.50

ரூபாய், நேந்திரம் கிலோ, 15.50 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 380 ரூபாய், செவ்வாழை தார், 400 ரூபாய், ரோபஸ்டரா தார், 280 ரூபாய், மொந்தன் தார், 260 ரூபாய், பச்சைநாடன் தார், 225 ரூபாய், பூவன் தார், 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

சென்ற, மூன்று மாதத்துக்கு முன், கதளி கிலோ, 40 முதல், 43 ரூபாய்க்கும், நேந்திரம் ஒரு கிலோ 40 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. இவ்விரு ரகங்களும் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், வாழை சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது:

மஞ்சள் விலை வீழ்ச்சி, கரும்பு வெட்டு கூலி உயர்வு போன்ற பிரச்னையால், வாழை அதிகளவில் பயிரிட்டோம். வாழை விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதால், மேலும் பாதிக்கப்பட்டுள்ளோம். நடப்பாண்டு வாழையில் இலை கருகல் நோய் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். விலையும் வீழ்ச்சியடைந்ததால், பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை நிறுத்தம்: இயந்திரம் பழுது எதிரொலி

மோகனூர்: மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான நடப்பாண்டு அரவைப் பணி, கடந்த, 1ம் தேதி துவங்கியது. பணி துவங்கிய சில மணி நேரத்தில், கரும்பு அரவை இயந்திரத்தின் பேரிங் கட்டானதால், அரவைப் பணி முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், மோகனூரில், கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. ஆலையின் கொள்ளவு, 4.30 லட்சம் டன்னாகும். எனினும், இந்தாண்டு, 80 ஆயிரம் டன் குறைவாக கரும்பு அரைக்க முடிவு செய்து, அதற்கேற்ப பதிவும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 7,000க்கும் அதிகமானோர், ஆலைக்கு கரும்பு சப்ளை செய்ய பதிவு செய்துள்ளனர்.

மொத்தம், 8,263 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்த கரும்புகள் அனைத்தும், குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர, இந்தாண்டுக்கான அரவைப் பருவத்தில், 3.50 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி, ஆறு மாத காலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன்படி, நடப்பு ஆண்டுக்கான கரும்பு அரவை, கடந்த மாதம், 29ம் தேதி, நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் துவக்கி வைத்தார். அதன்பின், கடந்த, 1ம் தேதி, கரும்பு அரவை பணி, முழு வீச்சில் துவங்கியது. இந்நிலையில், அரவைப் பணி துவங்கி மூன்று மணி நேரத்தில், கரும்பு அரவை இயந்திரத்தின் பேரிங் கட்டானது.

அதனால், கரும்பு அரவை முற்றிலுமாக தடைபட்டுள்ளது. அப்பழுதை விரைந்து சரி செய்ய, ஆலை நிர்வாகத்தினர் நடவடிக்கை மேற்கொள்ளாமல் சுணக்கம் காட்டி வருகின்றனர். அதன் காரணமாக, நான்கு தினங்களாக, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து, ஆலைக்கு லாரி மூலம் ஏற்றி வரப்பட்ட கரும்பு, இறக்கப்படாமல், அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இயந்திர பழுது எப்போது சரி செய்யப்படும் என்பதும் தெரியாததால், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்து கரும்புகளை அரவைக்கு கொண்டுவந்த விவசாயிகள், கவலையடைந்துள்ளனர்.

## தொழு உரம் தயாரிக்க மானியம் வழங்கல்: உதவி இயக்குனர்

ராசிபுரம்: "செறிவூடட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது' என, நாமகிரிப்பேட்டை வட்டார உதவி வேளாண் இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை :

நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், நடப்பு ஆண்டில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பண்ணை கழிவுகளை பயன்படுத்தி செறிவூடட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 15 அடி நீளம், ஆறு அடி அகலம், இரண்டு அடி ஆழம் உள்ள எரு குழிகள் வெட்டி, அதில் ஒரு ஏக்கருக்கு தேவையான செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயார் செய்யலாம்.

அதற்கு, 750 கிலோ எரு, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ யூரியா, இரண்டு கிலோ சூடோமோனாஸ், பத்து பாக்கெட் உயிர் உரம் ஆகியவை கலந்து எருக்குழியில் இட்டு, மேற்புறம் ஈர மண் கொண்டு பூச வேண்டும். இதை, 15 நாட்களுக்கு ஒரு முறை கிளறி விட வேண்டும். அதையடுத்து, இரண்டு மாதங்களுக்குள், நன்கு மக்கிய செறிவூட்டப்பட்ட தரமான தொழு உரம் தயாராகிவிடும். அதற்கு, 50 சதவீத மானியமாக, 2,236 ரூபாய் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள், நாமகிரிப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில், அவரவர் சிட்டா, ஃபோட்டோ, ரேஷன் கார்டு நகல்களுடன் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடையநல்லூர் பகுதியில் கடும் வறட்சி தண்ணீரின்றி கருகும் மரங்கள்

கடையநல்லூர் : கடையநல்லூர் பகுதியில் கடுமையான வறட்சி நிலவி வரும் நிலையில் தென்னை, கொய்யா, எலுமிச்சை மரங்கள் தண்ணீரின்றி காய்ந்து வருகின்றன.

தென்மேற்கு பருவமழையும் பொய்த்துவிட்ட நிலையில் கடந்த ஆண்டு பருவமழையும் போதுமான அளவில் பெய்யாத நிலையில் கடையநல்லூர், அச்சன்புதூர், பண்பொழி, வடகரை, காசிதர்மம், சொக்கம்பட்டி, திரிகூடபுரம், புன்னையாபுரம், கம்பனேரி, வேலாயுதபுரம், பொய்கை, போகநல்லூர் உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளில் கடுமையான வறட்சியின் காரணமாக பிசான சாகுபடிகள் மேற்கொள்வதில் கூட விவசாயிகள் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

புரட்டாசி மாதம் பிறந்துவிட்ட நிலையில் மூன்றாம் சனிக்கிழமையாவது மழை எட்டிப்பார்க்கும் என்ற ஏக்கத்தில் விவசாயிகள் மழைக்காக காத்திருக்கும் நிலையில் வறட்சியின் கோரப்பிடியால் விவசாய தென்னந் தோப்புகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னைகள் பெரும்பாலான பகுதிகளில் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தினால் காய்ந்து கிடக்கின்றன. இருக்கின்ற கிணற்று தண்ணீரை வைத்து தென்னையை பாதுகாக்க விவசாயிகள் பெரும்பாடுபட்டு வருகின்றனர்.

எலுமிச்சை, கொய்யா உள்ளிட்ட மரங்களும் சில பகுதிகளில் இலைகள் உதிர்ந்து மரம் வெறிச்சோடி காணப்படுகிறது. தென்னை ஓலைகள் எல்லாம் காய்ந்து மரங்கள் பரிதாபமாக காட்சியளித்த வண்ணம் உள்ளன. கடையநல்லூர் சுற்றுப்பகுதிகளில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பிசான சாகுபடி மேற்கொள்ளப்படக்கூடிய நிலையில் இந்த ஆண்டு ஆயிரம் ஏக்கராவது பிசான சாகுபடி மேற்கொள்ளப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பருவமழை தான் விவசாயிகளின் பிசான சாகுபடியின் நம்பிக்கைக்கு கை கொடுக்க வேண்டுமென்பதுதான் அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## துவரை சாகுபடியில் நாற்று விட்டு நடும் முறை அறிமுகம் :ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் வரை லாபம்

கோபிசெட்டிபாளையம்: துவரை சாகுபடியில் நாற்று விட்டு, நடும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் லாபம் ஈட்டலாம். கோபி வட்டாரத்தில் மானாவாரி மற்றும் வரப்பு பகுதியில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது.

துவரையை நேரடியாக விதையை ஊன்றுவது வழக்கம். தற்போது, நெற்பயிரைப் போல், துவரையையும் நாற்று விட்டு நடும் முறை அறிமுகமாகி உள்ளது.

கோபி வோளண் உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:

பொதுவாக, பயறு வகைகளை நாற்று நடும் பழக்கம் இல்லை. துவரை போன்ற பயறுகளை, நாற்று விட்டு, நடும் போது அதிக மகசூல் கிடைப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

இத்திட்டத்துக்காக தமிழக அரசு, ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மானியம் வழங்குகிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஜுன் முதல் ஆகஸ்ட் வரை ஆடிப்பட்டம், செப்டம்பர் முதல் நவம்பர் வரை புரட்டாசிப் பட்டம் என இரண்டு பட்டங்களில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. நாற்று விட்டு நட, 130 நாட்கள் வயதுள்ள, "ஆர்.ஜி.,7' என்ற துவரை ரகம் புரட்டாசி பட்டத்துக்கு ஏற்றதாகும். ஏக்கருக்கு ஒரு கிலோ தேவைப்படும்.

மணல், மண் மற்றும் எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து ஐந்து அங்குலத்துக்கு மூன்று அங்குலம் அளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்ப வேண்டும். ஒரு பாலித்தீன் பைக்கு ஒரு விதை என்ற விதத்தில் விதைக்க வேண்டும். விதைத்த எட்டாவது நாள் விதை முளைத்து வரத்துவங்கும். 15வது நாள் நன்கு முளைத்துவிடும். 20வது நாள் களை எடுக்க வேண்டும். துவரை நாற்றங்காலை நிழற்பாங்கான இடத்தில் அமைத்தல் அவசியம். தினசரி பூவாளி கொண்டு நீர் தெளித்தல் வேண்டும். விதைத்த, 30வது நாள், நடவு செய்ய நாற்றுகள் தயார் நிலைக்கு வரும்.

துவரை நடவுக்கு மூன்று வாரங்களுக்கு முன் நன்கு மக்கிய, ஐந்து டன் எரு அல்லது, 2.5 டன் மண் புழு உரம் இட வேண்டும். வரிசைக்கு வரிசை, ஐந்து அடிக்கு, மூன்று அடிக்கு என்ற இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வாழை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யும்போது ஊடுபயிராகவும் செய்யலாம்.

காய்கள், 80 சதவீதம் முதிர்ச்சி அடைந்தவுடன், செடிகளை அறுத்து, கட்டி வைத்து, பின் வயலில் காய வைக்க வேண்டும். பிரித்தெடுக்கப்படும் விதைகளை 10 சதவீத ஈரப்பதம் வரும் வரை காய வைக்க வேண்டும்.

சாதாரணமாக நேரடியாக துவரை விதைப்பதால் ஏக்கருக்கு, 300 கிலோ மகசூல் கிடைக்கிறது. நாற்று விட்டு, நடவு செய்வதால் ஏக்கருக்கு, 1,000 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்.

பச்சை துவரைக்காய் பெங்களூருக்கு உணவுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கோபி வட்டாரத்தில், 23 இடங்களில், செயல் விளக்க திடல் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டை விலை வீழ்ச்சி



நாமக்கல்:கடந்த சில மாதங்களாக கிடு கிடுவென உயர்ந்து வந்த முட்டை விலை, தற்போது சரிவடைந்து வருகிறது.நாமக்கல்லில் நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டை விலை 15 காசுகள் குறைக்கப்பட்டு, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இதை யடுத்து, கடந்த இரண்டு வாரங்களில், முட்டை விலை 25 காசு குறைந்துள்ளது. புரட்டாசி மாதம் என்பதால், முட்டை,இறைச்சி நுகர்வு பரவலாகக் குறைந்துள்ளது. ஐப்பசி மாதத்தில், முட்டை விலை மீண்டும் உயர வாய்ப்புள்ளது.

## மதுரை மல்லிகைக்கு "புவிசார் குறியீடு': மலருக்கு கிடைத்த, "முதல் மரியாதை




மதுரை: ""உலகளவில் தனித்துவம் வாய்ந்தது மதுரை மல்லிகை என்பதைக் குறிக்கும் வகையில், "புவிசார் குறியீடு' (ஜி.ஐ.,) கிடைத்துள்ளது," என, மதுரை விவசாயக் கல்லூரி டீன் வைரவன் தெரிவித்தார்.

மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களை உள்ளடக்கிய, "பழைய மதுரையின்' மண்வளம், மல்லிகைக்கு ஏற்றது. இந்த மண்ணில் விளையும் மல்லிகைக்கு மட்டும் கூடுதல் மணம், வெண்மை உண்டு. இரண்டு நாட்கள் வரை பூக்கள் வாடமல் நன்றாக இருக்கும். பூவின் காம்பும், இதழ்களும் சம உயரத்தில் இருக்கும். மதுரை மல்லி வாசம் என்றே சிறப்புடன் காலம் காலமாக போற்றப்படுவதே, மதுரை மல்லிகைக்கு சிறப்பு. தமிழகத்தின் பல இடங்களில், பரவலாக மல்லிகைப் பூக்கள் விளைந்தாலும், மதுரையின் சிறப்பு வேறிடத்தில் இல்லை. மதுரை மார்க்கெட்டிற்கு மட்டும் பிப்ரவரி, ஏப்ரல் மாதங்களில் 15 முதல் 20 டன் பூக்கள் வரத்து இருக்கும். நவம்பர், டிசம்பரில் வேறெங்கும் பூக்கள் உற்பத்தி இருக்காது; மதுரையில் மட்டும் குறைந்தளவு உற்பத்தி இருக்கும். இந்த சிறப்புகளுக்காக, மதுரை மல்லிகைக்கு "புவிசார் குறியீடு' கிடைத்துள்ளது. நாட்டில் ஒரு பூவிற்கு "புவிசார் குறியீடு' கிடைத்தது, இதுவே முதல்முறை.

**இதுகுறித்து டீன் கூறியதாவது:**
இரண்டு ஆண்டுகளாக, மதுரை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம் சார்பில், மல்லிகைக்கு "புவிசார் குறியீடு' பெறும் முயற்சியில் ஈடுபட்டோம். தனிநபர் பெயரில் வாங்க முடியாது என்பதால், தானம் அறக்கட்டளை மூலம், ஆறு மாவட்ட மல்லிகைப்பூ உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து, சங்கம் அமைத்தோம்; இதில் 200 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்; தொழில்நுட்ப ரீதியான ஆவணங்களை, மார்ச் 2011ல், சென்னையில் உள்ள அலுவலகத்தில் சமர்ப்பித்தோம்; மீண்டும் சில ஆவணங்கள் தேவைப்பட்டதால், திருத்தப்பட்டு, மார்ச் 2012 ல், மீண்டும் விண்ணப்பித்தோம். இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது "அறிவுசார் சொத்துரிமை' (ஐ.பி.ஆர்.,) இதழில், "மதுரை மல்லிகை'க்கு "புவிசார் குறியீடு' வழங்கப்பட்டுள்ளதாக, வெளியிடப்பட்டுள்ளது. தொல்காப்பியம், பரிபாடல், திருவிளையாடற் புராணங்களில் "மதுரை மல்லிகை' பற்றி கூறப்பட்டுள்ள ஆவணங்களை, திரட்டியுள்ளோம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் போது "பேக்கிங்' முக்கியம். அதற்கான தொழில்நுட்பத்தையும் விவசாயிகள், விற்பனையாளர்களுக்கு கற்றுத்தர உள்ளோம். நவம்பர், டிசம்பரில், உற்பத்தியை அதிகரிப்பதற்கான தொழில்நுட்பத்தை ஆய்வு செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

**தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் என்.ஜெகதீசன்:**
இதனால் பூ வர்த்தகம் இன்னும் அதிகரிக்கும். "மதுரை மல்லிகை' என்று பெருமையாக சொன்னாலும், நான்கு ஆண்டுகளில் உற்பத்தி 30 சதவீதம் குறைந்துவிட்டது. விளைநிலங்கள் மனையாகி விட்டன; பத்தியை மீண்டும் அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். தற்போது துபாய், கனடா, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு, சென்னையிலிருந்து தான் ஏற்றுமதி

செய்கிறோம். மதுரை விமான நிலையத்தில் பன்னாட்டு சேவை துவங்கினால், அதிகமாக ஏற்றுமதி செய்ய முடியும். அதற்கேற்ப உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யலாம்.

**கலப்படம் செய்தால் "காப்பு'***

புவிசார் குறியீடு கிடைத்திருப்பதால், வெளிநாட்டு ஏற்றுமதிக்கு, குறிப்பிட்ட விலையை இனி நிர்ணயிக்க முடியும்.

* விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

* இப்பெயரில், மற்ற பகுதிகளில் விளையும் மல்லிகைப் பூக்களை கலப்படம் செய்ய முடியாது. அப்படி செய்தால், 2 லட்சம் ரூபாய் அபராதம், ஐந்தாண்டு சிறை தண்டனை உண்டு.

**"புவிசார் குறியீடு' என்றல் என்ன:**
ஒரு குறிப்பிட்ட இடத்தையோ (புவியியல்) அல்லது தோற்றத்தையோ, குறிப்பிடும் பொருளின் மீது பயன்படுத்தப்படும் பெயர் அல்லது சின்னம், "புவிசார் குறியீடு' (ஜியாகிரபிக்கல் இண்டிகேஷன்) எனப்படுகிறது. இக்குறியீடு, அந்த பொருளின் சொந்த இடத்தின் தரத்தையும், நன்மதிப்பையும் பறை சாற்றும் சின்னமாக விளங்கும். இந்தியாவில் பாரம்பரியம் மிக்க பொருட்களுக்கு, மத்திய அரசு அங்கீகாரம் அளித்து பாதுகாக்கிறது. இச்சட்டம் 1999ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, செப்.15, 2003ம் ஆண்டு அமலுக்கு வந்தது.

**இதன்படி மத்திய அரசால் பதிவு செய்யப்பட்ட தமிழக பொருட்கள்:**

* சேலம் பேப்ரிக்
* காஞ்சிபுரம் பட்டு
* பவானி ஜமுக்காளம்
* மதுரை சுங்குடி
* கோவை வெட் கிரைண்டர்
* தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள்
* நாகர்கோவில் கோவில் நகைகள்
* தஞ்சாவூர் கலை தகடுகள்
* ஈஸ்ட் இந்தியா லெதர்
* சேலம் வெண்பட்டு
* கோவை கோரா பட்டு
* ஆரணி பட்டு

* சுவாமிமலை வெண்கலப் பொருட்கள்
* ஈத்தாமொழி நெட்டை தென்னை
* தஞ்சாவூர் பொம்மை
* விருப்பாச்சி மலை வாழை
* சிறுமலை மலை வாழை
* தற்போது மதுரை மல்லி

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**05.10.2012 A.M**

## முட்டை விலை 15 காசு குறைந்தது



நாமக்கல் : நாமக்கல் முட்டை விலை 15 காசுகள் குறைந்தது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது.
இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், 355 காசுகளாக இருந்த முட்டை விலையில் 15 காசுகள் குறைத்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 340 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

புரட்டாசி மாதம் துவங்கியதில் இருந்து முட்டை விற்பனை தமிழகத்தில் குறைந்தது. இதன் எதிரொலியாக பண்ணைகளில் முட்டை தேக்கம் அடைந்தது.
தேங்கிய முட்டைகளை விற்பனை செய்யும் நோக்கில் முட்டை விலை அதிரடியாக 15 காசுகள் குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## தேயிலை வாரியத்தில் பதிவு

## சிறு விவசாயிகள் கோரிக்கை



கொல்கத்தா: தமிழ்நாடு, அசாம், மேற்கு வங்காளம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில், தேயிலை உற்பத்தியில் சுமார் 2 லட்சம் சிறு விவசாயிகள் ஈடுபடுகின்றனர். ஆண்டு மொத்த உற்பத்தியான 98 கோடி கிலோவில் 26 சதவீதம் சிறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும், நில உரிமை பட்டா உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் இல்லாததால், இந்த விவசாயிகளால் தேயிலை வாரியத்தில் சேர முடியவில்லை.

இதனால், அரசு சலுகைகள் கிடைக்கவில்லை. இந்நிலையில், இந்திய சிறு தேயிலை விவசாயிகள் சம்மேளனம்(சிஸ்டா), மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள மனுவில், 'சிறு விவசாயிகளும் வாரியத்தில் சேர்ந்து பலனடையும் வகையில், விதிகளை எளிமையாக்க வேண்டும். சிறு விவசாயிகளை வாரியத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறியுள்ளது.

## மலைப்பகுதிகளில் கடும் வறட்சி

## பாபநாசம் அணைக்கு நீர்வரத்து குறைந்தது



நெல்லை : மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதால் பாபநாசம் அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இருந்து வரும் தண்ணீர் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளில் சேகரிக்கப்படுகிறது. பாபநாசம் அணையின் மூலம் நெல்லை மாவட்டத்தில் கார், பிசானம், முன் கார் என மூன்று போக நெல் சாகுபடி நடந்து வந்தது. ஆனால், தற்போது ஒரு போக சாகுபடிக்கே விவசாயிகள் திண்டாடும் நிலை உருவாகியுள்ளது.

பாபநாசம் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதாலும் தென் மேற்கு பருவமழை ஏமாற்றம் அளித்ததாலும் தொடர்ந்து 4வது ஆண்டாக கார் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. நேற்றைய முன்தினம் நிலவரப்படி, பாபநாசம் அணையின் நீர்மட்டம் 43 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 61 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து விநாடிக்கு 404 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 56.27 அடியாக உள்ளது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு ஒரு கன அடி வீதம் வரும் தண்ணீர் முழுவதும் திறந்து விடப்படுகிறது. பாபநாசம் அணைக்கு நீர்வரத்து குறைந்ததால் பரந்து விரிந்து காணப்படும் அணை குட்டை போல் காட்சியளிக்கிறது. வன உயிரினங்களும் தண்ணீரை தேடி அலைகின்றன.

ஊருக்குள் படையெடுக்கும் விலங்குகள்: களக்காடு மேற்கு தொடர்ச்சி மலையில் புலிகள் காப்பகம் அமைக்கப்பட்டு வனவிலங்குகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மலைப்பகுதியில் கடந்த 6 மாதத்திற்கும் மேலாக மழை பெய்யவில்லை. இதனால் வனப்பகுதியில் உள்ள அருவி, நீரோடைகள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

நீரோடைகளிலும் தண்ணீர் வற்றியதால் வனவிலங்குகள் தண்ணீரை தேடி ஊருக்குள் படையெடுத்து வரத் துவங்கியுள்ளன. மான் மற்றும் மிளாக்கள் பகல் நேரங்களில் கூட மலையடிவார தோட்டங்களில் உலா வருகின்றன. களக்காடு , சேரன்மகாதேவி பிரதான சாலையில் பத்மநேரி பிளவக்கல் இசக்கியம்மன் கோயிலில் இருந்து, பூதத்தான்குடியிருப்பு வரையுள்ள சாலைகளில் இரவில் மான், மிளாக்கள், கரடி, காட்டு பன்றிகள் நடமாட்டம் காணப்படுவதாக வாகன ஓட்டிகள் கூறுகின்றனர்.

வனவிலங்குகள் ஊருக்குள் புகுந்த வண்ணம் உள்ளதால் அவை ஆபத்துகளில் சிக்கி உயிரிழக்கும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. மலைப்பகுதியில் நிலவும் கடும் வறட்சியால் தண்ணீரை தேடி ஊருக்குள் வந்து ஆபத்தில் சிக்கும் வனவிலங்குகளை பாதுகாக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விலங்குகள் நல ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

குமரி மாவட்டத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவு இந்த ஆண்டு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. ஆறுகள், குளங்கள், அணைகள் என்று அனைத்தும் வற்றி விட்டன. வறட்சியின் கோரப்படிக்கு திற்பரப்பு அருவியும் தப்பவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன் முதல் முறையாக திற்பரப்பு அருவி முற்றிலுமாக வறண்டு காணப்பட்டது. இதன் பின்னர் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த சாரல் மழை காரணமாக கோதையாற்றில் தண்ணீர் வரத்து ஏற்பட்டு அருவிக்கு தண்ணீர் வர தொடங்கியது.

அதன்பிறகு தொடர்ச்சியாக மழை பொய்த்ததால் 2வது முறையாக தற்போது திற்பரப்பு அருவி வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியுள்ளது. அருவியின் 2 பக்கங்களிலும் பொது குழாய்களில் விழுவது போல் லேசாக தண்ணீர் விழுக¤றது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

05.10.2012 A.M

**கோயம்பேடு மார்க்கெட்டில்**
**பீன்ஸ் விலை திடீர் உயர்வு தக்காளி, கேரட், கோஸ் விலை வீழ்ச்சி**

கர்நாடக மாநிலத்தில் இருந்து லாரிகள் வரத்து குறைந்ததால் பீன்ஸ் விலை திடீர் என்று உயர்ந்துள்ளது. தமிழ்நாடு–ஆந்திரா மாநிலங்களில் காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளதால் தக்காளி, கேரட், கோஸ் விலை குறைந்துள்ளது.

லாரிகள் வரத்து குறைந்தது

காவிரியில் த ணீர் திறந்துவிடக்கூடாது என்று கர்நாடக மாநிலத்தில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால் கர்நாடக மாநிலத்தில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு லாரிகள் வரத்து சற்று குறைந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 15–க்கு மேற்பட்ட லாரிகளில் பீன்ஸ் வந்து கொ டு இருந்தது.

போராட்டம் காரணமாக தற்போது தினமும் 8 லாரிகளில் மட்டுமே பீன்ஸ் வரத்து உள்ளது. இதனால் ஒரு கிலோ பீன்ஸ் ரூ.18–க்கு விற்பனையானது நேற்று ரூ.22 ஆக உயர்ந்துவிட்டது.

இதேபோல அவரைக்காய் ஒரு கிலோ ரூ.25–க்கு விற்பனையானது ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு–ஆந்திரா ஆகிய மாநிலங்களில் காய்கறி விளைச்சல் அதிகரித்துள்ளதால் கோஸ், கேரட், தக்காளி, கத்தரிக்காய் போன்ற காய்கறிகள் விலை குறைந்துள்ளது.

கேரட், கோஸ் விலை சரிவு

கேரட் ஒரு கிலோ ரூ.25–க்கு விற்பனையானது ரூ.18 ஆகவும், சிக பு கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனையானது ரூ.12 ஆகவும், வெள்ளை கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.12–க்கு விற்பனையானது ரூ.10 ஆகவும், கோஸ் ஒரு கிலோ ரூ.12–க்கு விற்பனையானது ரூ.6 ஆகவும், பெரிய பாகற்காய் ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனையானது ரூ.14 ஆகவும், புடலங்காய் ஒரு கிலோ ரூ.18–க்கு விற்பனையானது ரூ.10 ஆகவும், கொத்தவரங்காய் ஒரு கிலோ 18–க்கு விற்பனையானது ரூ.15 ஆகவும், வெ டைக்காய் ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனையானது ரூ.16 ஆகவும் விலை சரிந்துள்ளது என்று கோயம்பேடு காய்கறி மார்க்கெட் ஆலோசகர் சவுந்தரராஜன் தெரிவித்தார்.

தக்காளி விலை விழ்ச்சி

முருங்கைக்காய், உருளைக்கிழங்கு, பெரியவெங்காயம், பீட்ரூட் போன்ற காய்கறிகள் விலையில் ஒரு மாதமாக மாற்றம் இல்லாமல் அதே விலையில் டிக்கிறது. உருளைக்கிழங்கு ஒரு கிலோ ரூ.20–க்கும், ஆந்திரா மாநில பெரியவெங்காயம் ஒரு கிலோ ரூ.9–க்கும், மராட்டியம் மாநில பெரியவெங்காயம் ஒரு

கிலோ ரூ.15–க்கும், பீட்ரூட் ஒரு கிலோ ரூ.10–க்கும் விற்பனையாகிவருகிறது.

அதிக வரத்து காரணமாக நாட்டு தக்காளி ஒரு கிலோ ரூ.7–க்கும், நவீன் தக்காளி ஒரு கிலோ ரூ.10–க்கும் விற்பனையாகிறது என்று தக்காளி வியாபாரிகள் சங்க தலைவர் தியாகராஜன் தெரிவித்தார்.

**தமிழ்நாடு–கர்நாடகா இடையே**
**5–வது நாளாக லாரிகள் போக்குவரத்து நிறுத்தம்**
**கர்நாடகாவிற்கு விவசாய விளை பொருட்களை கொ டு செல்வதில் சிக்கல்**

தமிழ்நாடு–கர்நாடகா இடையே 5–வது நாளாக லாரிகள் இயக்க படவில்லை. ஈரோடு மாவட்டத்தில் இருந்து விவசாய விளை பொருட்களை கர்நாடகாவிற்கு கொ டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

லாரிகள் நிறுத்தம்

சு ரீம் கோர்ட்டு உத்தரவை ஏற்றுக்கொ டு கர்நாடகா அரசு காவிரியில் த ணீர் திறந்து விட்டது. அதற்கு எதிர் பு தெரிவித்து கன்னட அமை புகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் பாதுகா பு கருதி தமிழக அரசு பஸ்கள் கர்நாடகாவுக்கு செல்வது கடந்த 4 நாட்களாக நிறுத்த பட்டு இருந்தது. இதை போல் கர்நாடக மாநில அரசு பஸ்களும் தமிழகத்திற்கு வரவில்லை. இதனால் பயணிகள் அவதி அடைந்து வருகின்றனர்.

நேற்று போக்குவரத்து தொடங்கும் என்று லாரி மற்றும் பஸ் டிரைவர்கள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் நேற்றும் கர்நாடகாவில் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றதால், நேற்று 5–வது நாளாக தமிழக வாகனங்களை கர்நாடகத்திற்கு செல்ல போலீசார் அனுமதிக்கவில்லை.

திரும்பி செல்கிறது

தமிழ்நாட்டில் இருந்து கர்நாடகாவுக்கு பாரம் ஏற்றிச்சென்ற லாரிகளும் ப ணாரியிலேயே நிறுத்த பட்டு உள்ளன. கர்நாடகாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வரும் பெரும்பாலான லாரிகள் கர்நாடக–தமிழக எல்லை பகுதியில் நிறுத்தி வைக்க பட்டுள்ளன.

தொடர்ந்து இதே நிலை டி பதால், கர்நாடக மாநில லாரிகள், கர்நாடகத்திற்கே திரும்பி சென்று உள்ளன. பிற மாவட்டங்களில் இருந்து கர்நாடகத்திற்கு செல்வதற்காக பாரம் ஏற்றி வந்த ஏராளமான லாரிகள் ப ணாரியில் நிறுத்தி வைக்க பட்டுள்ளன.

விவசாய விளைபொருட்கள்

ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உற்பத்தியாகும் வாழை பழத்தார்கள் ஏலங்கள் மூலம் எடுக்க பட்டு, அவைகளை வியாபாரிகள் கர்நாடகாவுக்கு லாரிகளில் விற்பனைக்காக கொ டு செல்வார்கள். தற்போது லாரிகள் கர்நாடகாவிற்கு செல்ல முடியாததால், ஈரோடு மாவட்டத்தில் விளைந்து உள்ள வாழை பழத்தார்களை வெட்ட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

காத்திருக்கின்றனர்.

மல்லிகை பூ பாதி பு

சத்தியமங்கலம் பகுதியில் உற்பத்தியாகும் மல்லிகை பூ அதிக அளவில் கர்நாடக மாநிலத்திற்கு கொ டு செல்ல படும். ஆனால் லாரிகள் செல்லாததால், இந்த பூக்கள் கர்நாடகாவிற்கு கொ டு செல்வதில் பாதி பு ஏற்பட்டுள்ளது.

இதை போல் கர்நாடகாவில் இருந்து ஈரோடு மாவட்டத்திற்கு விற்பனைக்கு கொ டு வர படும் தக்காளி, மக்காச்சோளம், மஞ்சள் ஆகியவை ம் வரவில்லை. தமிழக எல்லை வரை பஸ்கள் செல்வதால், கர்நாடகாவிற்கு செல்லும் பயணிகள் அது வரை பஸ்சில் சென்று, பின்னர் அங்கிருந்து அவர்கள் செல்ல வே டிய ஊர்களுக்கு கர்நாடக பஸ்களிலும், லாரிகளிலும் சென்று வருகின்றனர்.